தாம்பரம் மாநகராட்சி, பம்மல் மண்டலம் 31 வது வார்டு திருநீர்மலையில் ரூ.48 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்ட நகர்புற துணை சுகாதார நிலையத்தை கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு எம்.பி முன்னிலையில் மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் தலைமையில் அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார். இதில் இ.கருணாநிதி எம்.எல்.ஏ., மேயர் க.வசந்தகுமாரி, துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, பகுதி செயலாளர் த.ஜெயக்குமார், மாமன்ற உறுப்பினர் சித்ராதேவி முரளிதரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

### டி.ஆர்.பாலு எம்.பி முன்னிலை! மாவட்ட ஆட்சியர் அருண்ராஜ் தலைமை!

# திருநீர்மலையில் நகர்ப்புற துணை சுகாதார நிலையம்: அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்!

### இ.கருணாநிதி எம்.எல்.ஏ. - மேயர் க. வசந்தகுமாரி - துணை மேயர் கோ.காமராஜ் - வே.கருணாநிதி -சித்ராதேவி -முரளிதரன் பங்கேற்பு! நிகழ்ச்சி ஒருங்கிணைப்பு - த.ஜெயக்குமார்!

சென்னை, ஏப்.14-

தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் சட்டமன்றத் தொகுதி மண்டலம் 1 திருநீர் மலை 31வது வட்டத்தில் மாநகராட்சி பொது நிதியில் கட்டப்பட்ட ஆரம்ப சுகாதார நிலையம் மதிப்பீடு 48 லட்சம் மற்றும் சமுதாயக்கூடம் 35 இலட்சத்து.80 ஆயிரம் மதிப்பீட் டில் புதுப்பிக்கப்பட் டுள்ளது.

அதனை 11/04/2025 வெள்ளிக்கிழமையன்று மாலை 5 மணிக்கு செங்கல்பட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் செ. அருண்ராஜ் தலைமையில், மாவட்டக் கழகச் செயலாளர் - குறு சிறு நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் திறந்து வைத்தார்கள் .கழகப் பொருளாளர், திருப்பெரும்புதூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.ஆர்.பாலு எம்.பி முன்னிலை வகித்தார்.

பம்மல் வடக்குப் பகுதிச் செயலாளர் திரு நீர்மலை த.ஜெயக்குமார் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் க.வசந்தகுமாரி துணை மேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர் வே. கருணாநிதி, 31 வது வட்ட மாமன்ற உறுப்பினர் சித்ராதேவி முரளிதரன் வட்ட செயலாளர் டி.எம். ஜோசப் ,

பம்மல் வடக்கு பகுதி கழகத்தினுடைய நிர்வாகி கள் இரா.நரேஷ் கண்ணா.கே.சந்திரன், எஸ்.கே. நெப்போலியன், மூ.ஸ்ரீதர் க.ஜெயசீலன் ஜி.பபிதா ச. பிரபு மாநகரக் கழகப் பிரதிநிதிகள் இரா. குமரேசன், இரா.பாபுஜி சி. பார்த்தசாரதி க.சுந்தரமூர்த்தி மற்றும் வட்ட கழக செயலாளர்கள் ப. அன்பழகன்,க. மோகன் மு.நி. தமிழ்குமரன் ,ப.ஆண்டவன்,

மாநகராட்சி மன்ற உறுப்பினர்கள் ஜெ. சண்முகசுந்தரி,கலைவாணி பிரபு, , சித்ரா தமிழ் குமரன் ,மதினா பேகம் ஆரிப், ரம்யா சத்திய பிரபு, சத்யா மதியழகன் வட்டக் கழக நிர்வாகிகள், கழகு முன்னோடி கள்,மாவட்ட, மாநகர, பகுதி, வட்ட அமைப்பாளர்கள், துணை அமைப் பாளர்கள், கழக இளைஞரணி மாணவரணி மகளிர் அணி தகவல் தொழில் நுட்ப அணி உள்ளிட்ட அனைத்து அணிகளின் நிர்வாகிகள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

மீன்வளம் மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (13.04.2025) தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினம் முத்தாரம்மன் திருக்கோயிலுக்கு சென்று, அங்கு பக்தர்களின் வசதிக்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையத்தினை திறந்து வைத்து மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவ பணியாளர் பணியிடங்களுக்கான பணி நியமன ஆணைகளை வழங்கினர். உடன் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர் அன்புமணி, உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் உள்ளனர்.

### கழக தேர்தல் பணிக்குழுச் செயலாளர் வேளச்சேரி பி.மணிமாறன் எம்.சி. தலைமையில்

# வேளச்சேரியில் அம்பேத்கர் பிறந்த நாள் விழா: நல உதவிகள் வழங்கல்!

### அமைச்சர் மா.சுப்பிரமணியன் – எஸ்.ஜெகத்ரட்சகன் – தமிழச்சி தங்கபாண்டியன் – மேயர் பிரியா பங்கேற்பு!

சென்னை, ஏப். 14 -

சென்னை தெற்கு மாவட்டம், 177 வது வார்டு திமுக சார்பில் அண்ணல் அம்பேத்கர் பிறந்த நாள் விழா, நலத் திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று (14-04-25 திங்கட்கிழமை) மாலை 4 மணி அளவில் வேளச்சேரி, காந்தி சாலை, அம்பேத்கர் திடலில் நடைபெறுகிறது.

கழக மாநில தேர்தல் பணிக் குழுச் செயலாளர் - மாமன்ற உறுப்பினர் வேளச்சேரி. பெ.மணிமாறன் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன், எஸ்.ஜெகத்ரட்சகன் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு நல உதவிகள் வழங்குகின்றனர்.

தமிழச்சி தங்கபாண்டியன், மேயர் பிரியா ராஜன், சட்டமன்ற உறுப்பினர்கள் ச. அரவிந்த்ரமேஷ், காரம்பாக்கம் கணபதி, அசன் மௌலானா, ஏ.எம்.வி. பிரபாகர் ராஜா, துணை மேயர் மு.மகேஷ்குமார், நிலைக்குழு தலைவர்கள் க.தனசேகரன், த.விஸ்வநாதன், தலைமை கழக நிர்வாகிகள், க.சோமு, காசிமுத்து மாணிக்கம், ரத்னா லோகேஷ்வரன்,

பகுதி கழக செயலாளர்கள் அரிமா.சு.சேகர், துரைக பிலன், எம்.கிருஷ்ணமூர்த்தி, இரா. துரைராஜ், பெருங்குடி எஸ். வி. இரவிச்சந்திரன், வி.இ.மதியழகன், ஜி.வெங்கடேசன், நொளம்பூர் வே. ராஜன், மு.இராஜா, கேக கண்ணன், துரைவீரமணி

மாவட்ட கழக நிர்வாகிகள் எஸ்.குணசேகரன், மு. மனோகரன், பா.வாசுகி பாண்டியன், எஸ்.பாஸ்கரன், பொதுக்குழு உறுப்பினர் எம்.ஸ்ரீதரன் எம்.சி., பெ.இரவிசங்கர், மண்டல செயலாளர் வி,சி,க கு.திருமாறன், வி,சி,க, மீ.சுமித் வி,சி,க, காங்கிரஸ் நிர்வாகிகள், கே.பி. தாமஸ், பி.சரவணன், கே.பி. ஜேம்ஸ், தலைமை பொதுக் குழு உறுப்பினர் பாலசுந்தரம், பி.ஜே.பாஸ்கர், மா.அன்பரசன், வே.ஆனந்தம் எம்.சி., மகேஷ்வரி எம்.சி. ,த.ஜெகதீசன், த.ரமேஷ், சாதிக், பரிமேல், சுரேஷ், சி.பழனி, சங்கர், பொ.த. எழில்வாணன், மைதிலி, டில்லிகுமார், பொ.த.மதிவாணன், பாலசதிஷ், தே.கோபி, கே.என். தமோதரன், த.பார்த்திபன், எஸ்.முருகவேல், க.பாரதிதாசன், வி.சக்திவேல், வி.ஜி. மோகன், வி.பார்த்தசாரதி, சி. முருகன், ஜெ.பவளவண்ணன், க.பத்மராஜன், ந.நீலகண்டன், மு.ஜெயசந்திரன், ஜி.நடராஜன், வே.கணேஷ் குமார், அ.நீலகண்டன், கோ. சிவக்குமார்,

ஆர்.ரமேஷ், இரா.ஏழுமலை, சி.வி.இளங்கோவன், நவபாரதி, பி.சேசம்மாள், க.ராகுல், விஷ்வா, சண்முகநாதன், ம.கோபாலாகிருஷ்ணன், பா.மணி, என்.மணிமாறன், ஈ.செல்வகுமார், இ. ரவிசந்திரன், த.மேகநாதன், கோல்டன் கன்னியப்பன், பக்தா, பெ.ராஜேஷ், எஸ். தனுஷ், பெலிக்ஸ், லிவிங்ஸ்டன், மற்றும் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர்.

### சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில்

# 90,390 பயனாளிகளுக்கு ரூ.13.91 கோடி மதிப்பில் பல்வேறு அரசு நல உதவிகள் வழங்கப்பட்டுள்ளன!

### அமைச்சர் இரா.இராஜேந்திரன் மரவனேரியில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேரில் ஆய்வு செய்து தகவல்!

சேலம், ஏப்.14-

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் சேலம், மரவனேரியில் புதியதாகக் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேற்று (13.04.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். இந்த ஆய்வு மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி முன்னிலை யில் நடைபெற்றது.

பின்னர், சுற்றுலாத்துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் பயன்பெறும் வகையில் பல்வேறு திட்டங்களை அறிவித்து சிறப்பாகச் செயல்படுத்தி வருகிறார்கள். அந்தவகையில் சேலம் மாவட்டத்தில் கடந்த 4 ஆண்டுகளில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் மாணவ, மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் 76,929 மாணாக்கர்களுக்கு ரூ.6.74 கோடி மதிப்பிலான கல்வி உதவித்தொகையும், இலவச மிதிவண்டிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் 13,333 மாணாக்கர்களுக்கு ரூ.6.31 கோடி மதிப்பிலான மிதிவண்டிகளும், இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ் 128 பயனாளிகளுக்கு ரூ.8.56 இலட்சம் மதிப்பிலான தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டுள்ளன. சேலம் மாவட்டத்தில் ஆதிதிராவிடர் நலத்துறையின் மூலம் கடந்த 4 ஆண்டுகளில் 90,390 பயனாளிகளுக்கு ரூ.13.91 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டுள்ளன.

மேலும், அரசு ஆதிதிராவிடர் நலப்பள்ளி மற்றும் கல்லூரி மாணாக்கர்களின் விடுதிகளில் ரூ.88.85 இலட்சம் மதிப்பிலான 90 பணிகளும், அயோத்திதாச பண்டிதர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டத்தின் கீழ், பேரூராட்சி மற்றும் ஊராட்சிப் பகுதிகளில் ரூ. 11.76 கோடி மதிப்பீட்டிலான 75 பணிகளும் கடந்த 4 ஆண்டுகளில் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

அதேபோன்று, முதலமைச்சர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பேற்றது முதல் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் விடுதிக ளைப் பராமரிப்பதற்காக கூடுதலாக நிதி ஒதுக்கீடு செய்து வருகிறார்கள். அந்தவகையில், சேலம் தாட்கோ மூலமாக மரவனேரியில் ரூ.7.66 கோடி மதிப்பீட்டில் 180 கல்லூரி மாணவர்கள் பயன்பெறும் வகையில் கட்டப்பட்டு வரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியில் இன்றையதினம் நேரில் ஆய்வு மேற்கொள்ளப் பட்டது.

மரவனேரியில் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியானது தரைதளம் மற்றும் இரண்டு தளங்களுடன் மொத்தம் 31 அறைகள் வீதம் ஒவ்வொரு அறையிலும் 6 மாணவர்கள் தங்கும் வகையில் அமைக்கப்பட்டுள்ளது. குறிப்பாக, ஒவ்வொரு அறையிலும் நவீன குளியலறை மற்றும் கழிவறைகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும், இவ்விடுதியில் உள் விளையாட்டு அரங்கம், நூலகம், சமையலறை, உணவருந்தும் அறை உள்ளிட்ட வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இப்பணிகளை விரைவாக வும், உரிய கால அளவிலும் முடித்து மாணவர்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர அறிவுறுத்தப் பட்டுள்ளது.

இவ்வாறு சுற்றுலாத் துறை அமைச்சர் இரா.இராஜேந்திரன் தெரிவித்தார்.

இந்த ஆய்வின்போது, தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன், சேலம் வருவாய் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உடனிருந்தனர்.

### குலசேகரப்பட்டினம்

# முத்தாரம்மன் திருக்கோயிலில் புதிய மருத்துவ மையம் திறப்பு!

### அமைச்சர்கள் திருமதி பி.கீதா ஜீவன் - அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் - பி.கே.சேகர்பாபு பங்கேற்பு!

தூத்துக்குடி, ஏப்.14-

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, நேற்று (13.04.2025) மற்றும் சமூக நலம் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி பி.கீதா ஜீவன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் தூத்துக்குடி மாவட்டம், தூத்துக்குடி வைகுண்டபதி பெருமாள் திருக்கோயிலில் நடைபெற்று வரும் திருப்பணிகளை ஆய்வு செய்தனர். அதனைத் தொடர்ந்து அமைச்சர் பெருமக்கள் கோவில்பட்டி, பூவநாதர் சுவாமி திருக்கோயில் தேரோட்ட விழாவில் கலந்து கொண்டு, வடம் பிடித்து தொடங்கி வைத்தனர்.

மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் குலசேகரப் பட்டினம் முத்தாரம்மன் திருக்கோயிலுக்கு சென்று, அங்கு பக்தர்களின் வசதிக்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையத்தினை திறந்து வைத்து, புதிதாக பணி நியமனம் செய்யப்பட்டுள்ள மருத்துவர் மற்றும் பணியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

இந்து சமய அறநிலையத் துறையானது தன் ஆளுகைக் குட்பட்ட திருக்கோ யில்களில் திருப்பணிகள் மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துதல், திருத்தேர் மற்றும் திருக்குளங்களை சீரமைத்தல், பக்தர்களுக்கான அடிப்படை வசதிகளை மேம்படுத்தி வழங்குதல், திருக்கோயில் சொத்துக்களை ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்டெடுத்து பாதுகாத்தல் போன்ற பணிகளை செம்மையாக மேற்கொண்டு வருவதோடு, சட்டமன்றத்தில் அறிவிக்கப் பட்ட புதிய அறிவிப்புகளையும் நிறைவேற்றி வருகிறது.

தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி, பூவநாதர் சுவாமி திருக்கோயில் இன்று நடைபெற்ற தேரோ ட்டத்தினை சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதா ஜீவன், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, திருச்சி நாடாளுமன்ற உறுப்பினர் துரை வைகோ மற்றும் சட்டமன்ற உறுப்பினர் கடம்பூர் ராஜு ஆகியோர் வடம் பிடித்து இழுத்து தொடங்கி வைத்தனர்.

2024-25 ஆம் நிதியாண்டிற்கான இந்து சமய அறநிலையத்துறை சட்டமன்ற அறிவிப்பில் "அதிக அளவில் பக்தர்கள் வருகை புரியும் 17 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டு பக்தர்கள் பயன்பாட்டில் இருந்து வருகின்றன. இந்த ஆண்டு கூடுதலாக திருவள்ளூர் மாவட்டம், பெரிய பாளையம், அருள்மிகு பவானியம்மன் திருக்கோயில் மற்றும் தூத்துக்குடி மாவட்டம், குலசேகரப்பட்டினம், அருள்மிகு முத்தாரம்மன் திருக்கோ யில் ஆகிய இரண்டு திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் புதியதாக அமைக்கப்படும்." என அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பினை நிறைவேற்றிடும் வகையில் மீன்வளம் - மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன் மற்றும் இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் குலசேகரப் பட்டினம் முத்தாரம்மன் திருக்கோயிலுக்கு நேரில் சென்று அங்கு பக்தர்களின் வசதிக்காக புதிதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவ மையத்தினை திறந்து வைத்து மருத்துவர், செவிலியர் மற்றும் மருத்துவப் பணியாளர் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டோருக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினர்.

இந்த மருத்துவ மையத்தில் முதலுதவி மற்றும் அடிப்படை சிகிச்சை மேற்கொள்வதற்கு தேவையான ஆக்ஸிஜன் சிலிண்டர்கள், இரத்த அழுத்தமானி, படுக்கைகள், உயிர் காக்கும் மருந்துகள் போன்ற அனைத்து அடிப்படை வசதிகளும் உள்ளன. தற்போது வரை 19 திருக்கோயில்களில் மருத்துவ மையங்கள் ஏற்படுத்தப்பட்டு, இதுவரை 7,50,000 நபர்கள் சிகிச்சை பெற்று பயனடைந்துள்ளனர்.

இந்நிகழ்ச்சிகளில் இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், தூத்துக்குடி மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான், இந்து சமய அறநிலையத்துறை இணை ஆணையர்கள் அன்புமணி, ஞானசேகரன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதி கள் மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு மாலை அணிவிக்கிறார்! எழும்பூர் தெற்குப் பகுதி சார்பில்

# அம்பேத்கர் சிலைக்கு மரியாதை! 1000 பேருக்கு சமபந்தி விருந்து!

### பகுதிச் செயலாளர் வி.சுதாகர் வேண்டுகோள்!

சென்னை, ஏப்.14-

எழும்பூர் தெற்குப் பகுதிச் செயலாளர் வி.சுதாகர் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சென்னை கிழக்கு மாவட்டம் எழும்பூர் தெற்குப் பகுதி சார்பில் சட்ட மாமேதை அண்ணல் அம்பேத்கர் அவர்களின் 134 வது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு இன்று (14.04.2025 திங்கள் கிழமை) காலை நேரு விளையாட்டு அரங்கம் அருகில் உள்ள டாக்டர் அண்ணல் அம்பேத்கர் அவர்களின் திருஉருவச் சிலைக்கு அமைச்சர் பி.கே. சேகர்பாபு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி 1000 பேருக்கு சமபந்தி உணவு வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் எழும்பூர் தொகுதி மாவட்ட,பகுதி ,வட்ட கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் BLA2, BLC , நிர்வாகிகள் இளைஞர் அணி, மகளிர் அணி, கழகத் தோழர்கள், கழகத் தொண்டர்கள், அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளும்படியாக அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

இவ்வாறு எழும்பூர் தெற்கு பகுதி கழகச் செயலாளர் வி.சுதாகர் தெரிவித்துள்ளார்.

### வட்டச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் – சட்டமேதை

# டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் பிறந்த நாள் - சிலைக்கு மரியாதை!

### மாவட்டச் செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் மாலை அணிவிக்கிறார்!

சென்னை, ஏப். 14 -

புழல் 24-வது வட்டக் கழகம் சார்பில் சட்ட மேதை டாக்டர் பி.ஆர்.அம்பேத்கர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு புழல் ஜி.என்.டி. ரோட்டில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்படுகிறது என வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கை வருமாறு:

இந்திய அரசியல் சாசனத்தின் தந்தை டாக்டர் பி.ஆர். அம்பேத்கர் அவர் களின் பிறந்தநாளை முன்னிட்டு இன்று (14.4.2025-திங்கட்கிழமை) காலை 8.30 மணி அளவில் வட்ட செயலாளர் கே.பி.சுந்தரேசன் தலைமையில் சென்னை வடகிழக்கு மாவட்ட செயலாளர் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான மாதவரம் எஸ். சுதர்சனம் வட்ட நிர்வாகிகள் சி.ஜே.ரவி, பி. கென்னடி, என். எழிலரவணன், எம். அந்தோணி, மலர்கொடி, செல்வராஜ், ஏ.ஜெயகர், பி.எஸ்.என். எல்.நாகராஜ், கே.பி.பி.அறிவழகன், எம்.கௌதமன், எம். உதயப்பாரி ஆகியோர் முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செய்ய உள்ளார்.

இந்த நிகழ்வில் வட்டக் கழக நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இவ்வாறு வட்டக் கழகச் செயலாளர் கே.பி.சுந்தரேசன் தெரிவித்துள்ளார்.

சுற்றுலாத்துறை அமைச்சர் இரா. இராஜேந்திரன் சேலம், மரவனேரியில் ரூ.7.66 கோடி மதிப்பீட்டில் புதிதாகக் கட்டப்பட்டுவரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவர் விடுதியினை நேற்று(13.04.2025) நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்கள். உடன், மாவட்ட ஆட்சித் தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, தாட்கோ செயற்பொறியாளர் நடராஜன், சேலம் வருவாய் வட்டாட்சியர் பார்த்தசாரதி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.

சென்னை வடக்கு மாவட்டம் பெரம்பூர் தெற்கு பகுதி இளைஞரணி சார்பில் பகுதி அமைப்பாளர் சி. சுரேஷ் எனது ஏற்பாட்டில் 36 வது வட்டத்தில் நீர் மோர் பந்தலை சென்னை வடக்கு மாவட்ட பொறுப்பாளர் ஆர். டி.சேகர் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார். நிகழ்ச்சியில் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜே.ஜே.எபினேசர் எம்.எல்.ஏ., பகுதி கழகச் செயலாளர்கள் க.ஜெயராமன், அ.முருகன், எஸ்.ஆர்.கமலக்கண்ணன், எ.தமிழ்ச்செல்வன், வட்ட கழக செயலாளர்கள் ஏ.ஆர்.ஆர்.மலைச்சாமி எம்.சி., த.ஆறுமுகம், பெரம்பூர் எஸ். அருள், ஜி.மாரிமுத்து, வி.முருகன், எச்.ராஜ்குமார், துணை அமைப்பாளர்கள் தினகரன், திருமலை, எச். சதீஷ், சாம் பிளாசன், இ.அந்தோனி, ஜுலியன் பால், உமா, ஜான் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.